சுற்றறிக்கை இல: PRE/2024/03

எனது இல. :- TR/01/13/2019(II)VR
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை, ராஜகிரிய.
2024.07.10

TR - 01

மிக முக்கியம் / அவசரம்

அமைச்சுக்களின் செயலாளர்கள் / மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் / மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள், அரச கம்பனிகள் மற்றும் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் பிரதானிகள் / பொது முகாமையாளர்களுக்கு,

**நாடளாவிய தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு அரச வாகனங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்**

நாடளாவிய ரீதியிலான தேர்தலொன்றின்போது வாக்கெடுப்பு நிலைய கடமைகளுக்காக அலுவலர்களின் போக்குவரத்து, வாக்கெடுப்பு நிலையங்களுக்குத் தேவையான ஏனைய உபகரணங்கள், எழுது பொருட்கள் முதலியவற்றை எடுத்துச்செல்லல் போன்றவற்றுக்கும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கார், ஜீப், ஸ்டேசன் வெகன், வேன், டபள்கெப், க்ரு கெப், பஸ் வண்டி மற்றும் முச்சக்கர வண்டி போன்ற வாகனங்கள் அதிகளவில் தேவைப்படும். எனவே தங்களுடைய நிறுவனத்தில் காணப்படும் சிறப்பான ஓட்ட நிலையிலுள்ள அனைத்து மோட்டார் வாகனங்களையும் மேற்படி தேர்தலின்போது பயன்படுத்துவதற்காக குறித்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு வழங்குமாறு அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் பிரதானிகள் ஆகியோரிடம் கேட்டுக்கொள்வதற்காக இக்கடிதம் வெளியிடப்படுகின்றது. இந்தக் கடிதம் மற்றும் வாகனங்கள் கணக்கெடுப்பு படிவத்தை தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் (www.elections.gov.lk) பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

02. தங்களுடைய அமைச்சு, திணைக்களம், கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் சிறந்த ஓட்ட நிலையிலுள்ள அனைத்து வாகனங்கள் தொடர்பான தகவல்களையும் (செயற்பாட்டுக் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்கள் அடங்கலாக) இத்தோடு இணைக்கப்பட்டுள்ள வாகனக் கணக்கெடுப்புப் படிவத்தில் உட்சேர்த்து இச்சுற்றறிக்கை கிடைக்கப்பெற்று 2 வாரங்களுக்குள் கொழும்பு மாவட்டத்தினுள் அமையப்பெற்றுள்ள கொழும்பு, தெஹிவளை - கல்கிசை மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை எல்லைக்குள் மற்றும் செத்சிறிபாய I மற்றும் II, இசுருபாய மற்றும் சுஹுருபாய ஆகிய அலுவலகக் கட்டிடத் தொகுதிகளில் அமையப் பெற்றுள்ள அலுவலகங்களின் வாகனங்கள் தொடர்பான விபரங்களை தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல் ஆணைக்குழு, இராஜகிரிய என்ற முகவரிக்கும், கொழும்பு மாவட்டத்தினுள் மேலே குறிப்பிடப்படாத பிரதேசங்களில் அமைந்துள்ள அரச அலுவலகங்களின் வாகனங்கள் தொடர்பான விபரங்களை பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், கொழும்பு நகர தேர்தல்கள் அலுவலகம், 5 ஆவது மாடி, 'நிலமெதுர', எல்விட்டிகல மாவத்தை, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05 என்ற முகவரிக்கும், ஏனைய மாவட்டங்களில் அமைந்துள்ள அரச அலுவலகங்களின் வாகனங்கள் தொடர்பான விபரங்களை குறித்த மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கும் அனுப்பிவைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

03. நாடளாவிய தேர்தலொன்றின்போது அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அதிக எண்ணிக்கையான வாகனங்கள் தேவைப்படுவதோடு, அந்த வாகனங்களை தமது மாவட்டத்தில் உள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளில் இருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும். எனவே அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், நியதிச்சட்ட நிறுவனங்களின் தவிசாளர்கள் / பிரதம நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் பொது நிருவாக சுற்றறிக்கைக்கமைய உத்தியோகபூர்வ வாகனம் உரித்துடைய அலுவலர்களுக்கு ஒரு வாகனம் வீதம் குறித்தொதுக்கப்பட்டுள்ள வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வாகனங்களையும் தேர்தல் அலுவல்களுக்காக வழங்க வேண்டிய வாகனங்களாகக் கருதி செயற்பட வேண்டுமென சம்பந்தப்பட்ட தலைவர்களை அறிவுறுத்துவதற்கு தயவுடன் நடவடிக்கை எடுக்கவும். இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள அச்சிடப்பட்ட

கணக்கெடுப்புப் படிவத்தின் 8 ஆம் நிரலில் குழாம் வாகனமொன்றாயின் குறித்த நிரலில் (√) என்ற அடையாளத்தை இடவும். ஒதுக்கிய வாகனமொன்றெனில், அதற்குரிய நிரலில் (√) என்ற அடையாளமிடுவதுடன் வாகனம் குறித்தொதுக்கப்பட்டுள்ள அலுவலர் தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும். செயற்பாட்டுக் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனமெனில், அதற்கு முன்னே OL எனக் குறிப்பிடவும். மேலும், வாகன உரித்தற்ற பதவிநிலை அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர் குழுக்களின் போக்குவரத்துக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து வாகனங்கள் தொடர்பான தகவல்களையும் அந்தந்த நிறுவனங்களின் ஒவ்வொரு பிரிவின் கடமைகளுக்காக குறித்தொதுக்கப்பட்டுள்ள வாகனங்கள் அடங்கலாக இவ்வனைத்து வாகனங்களையும் குழாம் வாகனங்களாகக் கருதி தேர்தல் கடமைகளுக்காக வழங்க வேண்டுமென அனைத்து நிறுவனத் தலைவர்களையும் அறிவுறுத்தல் வேண்டும்.

04. தேர்தல் கடமைகளுக்குப் பயன்படுத்திக்கொள்வதற்காக கொழும்பு குழாமிலிருந்து ஒதுக்கித் தரப்படுகின்ற வாகனங்களில் அதிக எண்ணிக்கையும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு தகவல்கள் வழங்கப்பட்ட வாகனங்களும் உரிய முறையில் அவர்களுக்கு அறிக்கையிடப்படுவதில்லை என்ற விடயம் வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினாலும் எனக்கு அனுப்பிவைக்கப்படுகின்ற அறிக்கைகளில் முக்கியமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலைமை காரணமாக தாம் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகிறது. இதனை எவ்விதத்திலும் சாதாரண விடயமொன்றாக கருத முடியாது என்பதை வலியுறுத்துவதுடன் தேர்தலொன்றின்போது தேர்தல் கடமைகளுக்கான அலுவலர்களைப் போன்றே, வாகனங்களையும் ஏனைய அரச வளங்களையும் பெற்றுக்கொள்ளும் முழு அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உண்டென்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன். தேர்தல் பணிகளுக்காக அரச நிறுவனங்கள் வசமுள்ள வாகனங்களை உரிய பிரகாரம் பெற்றுக்கொடுத்தல் அந்நிறுவனத் தலைவர்களின் பொறுப்பாகுமென இதற்கு முன்னர் நடைபெற்ற பல தேர்தல்களின்போது சனாதிபதியின் செயலாளரால் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் ஆகியோருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதென்பதையும் நினைவூட்ட விரும்புகின்றேன். எனவே எதிர்வரும் தேர்தல்களின்போது இவ்வாறான நிலைமையொன்று ஏற்படாத விதத்தில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு தங்களுடைய அலுவலர்களை அறிவுறுத்துமாறு தயவாய் கேட்டுக்கொள்கின்றேன்.

05. எதிர்வரும் தேர்தல்களின்போது தேர்தல் கடமைகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அலுவலர்களிடையே உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு மாத்திரம் அந்த உத்தியோகபூர்வ வாகனத்தை தேர்தல் கடமைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்கு குறித்த மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களால் அனுமதி வழங்கப்படும். ஏனைய எந்தவொரு அலுவலரும் தேர்தல் கடமைகளுக்குச் செல்வதற்காக தமது அலுவலக குழாம் வாகமொன்றைப் பயன்படுத்தலாகாது.

06. வாகனங்கள் தொடர்பான தகவல்கள் பட்டியல்களை அனுப்பிவைக்கும் பொறுப்பு அமைச்சொன்றெனில், சிரேட்ட உதவி செயலாளரொருவருக்கும் திணைக்களமொன்றெனில், மேலதிக அல்லது பிரதி பிரதானியொருவருக்கும் நியதிச்சட்ட சபை அல்லது கூட்டுத்தாபனமொன்றெனில், மேலதிக பொது முகாமையாளரொருவரின் அந்தஸ்துக்குக் குறையாத பதவியொன்றை வகிக்கின்ற அலுவலரொருவருக்கும் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 104(ஆ) 4 அ உப உறுப்புரைகளுக்கமைய அரச சொத்தான இவ்வாகனங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதைக் கவனித்துக்கொள்வதற்கு நிறுவனம் வசமுள்ள அனைத்து வாகனங்கள் தொடர்பான தகவல்களையும் வழங்குவதற்கு அனைத்து நிறுவனத் தலைவர்களும் கட்டாயம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பொதுவாக வாக்கெடுப்பு நடாத்தப்படுகின்ற தினத்திற்கு முன்னர் முழுமையான மூன்று நாள் காலப்பகுதிக்காக இந்த மோட்டார் வாகனங்கள் தேவைப்படுவதோடு, வாக்கெடுப்புத் தினத்திற்கு அடுத்த தினம் அவை மீண்டும் விடுவிக்கப்படும்.

07. பாரியளவில் சேதமடைந்துள்ளமை காரணமாக அல்லது பாரதூரமான திடீர் விபத்துக்கு உள்ளானமை காரணமாக முழுமையாக திருத்தப்பட வேண்டிய நிலையிலுள்ள வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வாகனங்கள் தொடர்பான விபரங்களையும் இத்தோடு உள்ள படிவத்தில் உட்சேர்த்தல் வேண்டும். மேலும், நீங்கள் தகவல்களைச் சமர்ப்பித்துள்ள வாகனங்களைப் பரீட்சித்துப் பார்த்து தேவையெனில் அவற்றில் செய்யவேண்டிய சிறிய பழுதுபார்ப்புக்கள் அல்லது பாரமரிப்பு வேலைகள் காணப்படுமாயின், அவற்றை மேற்கொண்டு தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்காக வாக்கெடுப்பு தினத்திற்கு ஆகக்குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்னரே தயாராக வைத்திருத்தல் வேண்டும்.

08. வாகனங்கள் தொடர்பான கணக்கெடுப்பின்போது கொழும்பு மாவட்டத்தின் அரச நிறுவனங்களினால் தகவல் வழங்கப்பட்டுள்ள வாகனங்களை தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் கோரிக்கைக்கும் அமைவாக குறித்தொதுக்கி வழங்கப்படும்.இவ்வாறு தெரிவத்தாட்சி அலுவலர்/ மாவட்ட செயலாளருக்கு குறித்தொதுக்கி வழங்கப்பட்ட வாகனங்களை தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்காக தெரிவத்தாட்சி அலுவலரினால் அவ்வாகனங்கள் அறிக்கையிடப்பட வேண்டிய திகதி, இடம், நேரம் என்பன அறிவிக்கப்பட்ட பின்னர், உரிய தினம்/ நேரத்திற்கு அறிக்கையிடத்தக்கவாறு அவ்வாகனங்கள் அனைத்தையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தமது நிறுவனத்தின் அலுவலர்களும் குறித்த மாவட்டங்களுக்கு தேர்தல் கடமைகளுக்குச் செல்லவேண்டியுள்ள போதிலும், அவர்களுடன் அனுப்புவதற்காக மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களை ஒருபோதும் வைத்திருத்தலாகாது. தயவுசெய்து இது தொடர்பாக உங்கள் நிறுவனத்தின் வாகனங்களுக்குப் பொறுப்பான அலுவலரை தயவுசெய்து அறிவுறுத்தவும்.

09. தேர்தல் கடமைகளுக்காக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு (மாவட்ட செயலாளர்கள்) குறித்தொதுக்கி வழங்கப்படுகின்ற வாகனங்களுக்குத் தேவையான எரிபொருள், உராய்வுநீக்கி எண்ணெய் (Lubricant oil) என்பவற்றை தெரிவத்தாட்சி அலுவலர்களால் எரிபொருள் கட்டளைப் படிவத்தினூடாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வாகனம் சொந்தமான நிறுவனத்தினால் வாகனம் குறித்தொதுக்கப்பட்ட மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகத்திற்கு அறிக்கையிடுவதற்குச் செல்வதற்கு மாத்திரம் தேவையான எரிபொருளை வழங்குதல் வேண்டும். <u>அந்த எரிபொருளுக்காக செலவிடப்பட்ட தொகை, தேர்தல் செலவு விடயத்தின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் மீள்நிரப்பல் செய்யப்படும்.</u>

10. சாரதிகளின் மேலதிக நேர வேலை மற்றும் இணைந்த படிகள் என்பவற்றை தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற பணியாட்டொகுதியினருக்கு கொடுப்பனவு செய்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் தேர்தல் முடிவடைந்த பின்னர் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கை மூலம் அறியத் தரப்படும்.

11. தெரிவத்தாட்சி அலுவலரால் தனக்கு அறிக்கையிடுமாறு அறிவிக்கப்படுகின்ற அனைத்து வாகனங்களையும் குறித்த தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பிவைக்கும் முழுப் பொறுப்பை வாகனக் கணக்கெடுப்புத் தகவல் படிவங்களை அத்தாட்சிப்படுத்தியுள்ள அலுவலர் பொறுப்பேற்றல் வேண்டும

12. தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படும் அனைத்து சாரதிகளுக்கும் வாகன சுத்திகரிப்பாளர்களுக்கும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையுண்டு.

13. அரசியலமைப்பு சீர் திருத்தங்களூடாக திருத்தப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 104 (எ) உறுப்புரையினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களுக்கமைய இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

14. எதிர்வரும் தேர்தலை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்காக தாங்கள் உள்ளிட்ட பணியாட்டொகுதியினர் அனைவரிடமிருந்தும் கிடைக்கப்பெறுகின்ற ஒத்துழைப்பை பெரிதும் மெச்சுகின்றேன்.

**சமன் ஸ்ரீ ரத்னாயக்க,**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்,**
தேர்தல் ஆணைக்குழு

**பிரதிகள்:**

1. செயலாளர், தேர்தல் ஆணைக்குழு
2. அனைத்து மாவட்ட தெரித்தாட்சி அலுவலர்கள் /மாவட்ட செயலாளர்கள்
3. அனைத்து மாவட்ட பிரதி / உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள்
4. தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கள்
5. தேசியத் தேர்தல்கள் பிரிவு

} தகவலுக்காக மற்றும் தேவையான அலுவலுக்காக.